<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 120/2011</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பெஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **30.01.2026** |
| **பெயர்** | **நேதாஜி** |
| **த/பெ** | **காசியப்பநாடார்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.09.p.m**

**<u>2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1. வட்டாரா நாடார் சங்கம் அனைத்து ஊர்களிலும் உள்ளது என்றால் சரிதான். சங்கத்தின் தலைமை இடம் துாத்துக்குடியில் உள்ளது என்றால் சரியல்ல, தமிழ்நாடு மெர்கென்டல் வங்கி தான் துாத்துக்குடியில் உள்ளது. 1ம் பிரதிவாதியின் தலைமையகம் துாத்துக்குடியில் உள்ளது. தாவா சம்மந்தப்பட்ட பங்குகள் மேற்சொன்ன துா்ததுக்குடியில் இருந்து தான் பிரித்து கொடுக்கப்படுகிறது என்றால் சரிதான்.

2. அங்கிருந்து தான் பல வட்டார நாடார் சங்கங்களுக்கு பிரித்து கொடுக்கப்படுகிறது. அதனால் இந்த வழக்கின் அதிகார வரம்பு துாத்துக்குடியில் தான் உள்ளது என்றால் சரியல்ல, என்பபடி வழக்கின் வியாஜியம் மூலம் சென்னையில் தான் ஏற்பட்டது. என்னுடைய பங்கிற்கான நான் செலுத்த வேண்டிய தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் நான் செலுத்தவில்லை என்றால் சரிதான். எவ்வளவு காலம் தாமதாமாக கட்டினேன் என்றால் 10 வருடம். குறிப்பிட்ட காலத்திற்குள்

பங்கு தொகையை கட்டாத காரணத்தினால் நான் பங்கினை கோரும் உரிமையை இழந்துவிட்டேன் என்றால் சரியல்ல.

3. நான் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தாத காரணத்தினால் என் பங்கினை வேறு நபருக்கு மாற்றி கொடுக்க உரிமை உள்ளதா என்றால் இல்லை. என்படி நான் தொகையை எந்த தேதியில் செலுத்தினாலும் எனக்கு தான் உரிமை என்றால் சரிதான். பங்கின் மதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு தான் வருகிறத என்றால் சரிதான். அதனால் தான்நான் செலுத்த வேண்டிய பங்கு தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்த வேண்டிய விதிமுறை என்றால் சரியல்ல. 10 வருடம் கழித்து என் பங்கு தொகையின் மதிப்பு எவ்வளவு என்று கூற இயலுமா என்றால் தோராயமாக 2010–ஆம் ஆண்டில் 35 முதல் 37 வரை இருக்கும்.

4. மேற்சொன்ன மதிப்பின் அடிப்படையில் தான் நான் பாக்கி தொகையை செலுத்தினேன் என்றால் செலுத்தவில்லை. 2011–ல் ஒரு பங்கின் மதிப்பு ரூ. 200000 – என்றால் சரியல்ல. இந்த வழக்கை தொடுக்கும் போது நான் கோரும் இரண்டு பங்கின் மதிப்பு ரூ. 400000/– என்றால் சரியல்ல. வழக்கில் குறிப்பிட்டுள்ள இரண்டு பங்குகளையும் ஏற்கனவே வேறு நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். விற்பனை செய்துவிட்டு அதற்கான தொகையும் வேறு நபரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

5. 2–ம் பிரதிவாதியை பிரசிடன் என்று சேர்க்கப்பட்டு இருக்க கூடாது என்றும் வட்டார நாடார் சங்கத்தின் பிரதிநிதியாக தான் பிரசிடன்ட் என்று குறிப்பிட்டு இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் 2–ம் பிரதிவாதிக்கு எதிராக குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளும் சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. 2–ம் பிரதிவாதியின் பெயரில் எந்த குறைகளும்

இல்லை என்றும் அவர்கள் சட்டப்படி தான் நடந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>4–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

1. வாதிகள் தரப்பில் 5 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பங்கு சான்றிதழோ அல்லது நான் பங்கினை பெற்றதற்கான ஆவணமோ அல்லது நான் பணம் செலுத்தியதற்கான ஆவணங்களோ அல்லது எந்த ஒரு விண்ணப்பமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் கொடுத்ததாக நான் பிராதில் குறிப்பிட்டுள்ள பங்கு சான்றிதழை நான் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான், பங்கு சான்றிதழின் எண் மட்டும் பிராதில் குறிப்பிட்டுள்ளேன்.

2. மேற்சொன்ன பங்கின் எண் எனக்கு ஒதுக்கப்பட்ட எண் தான் என்பதை காட்டும் வகையிலும் நான் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறும் பங்கானது என் பெயருக்கு தான் ஒதுக்கப்பட்டது என்பதை காண்பிக்கும் வகையில் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் பணம் செலுத்தியதற்கோ அல்லது பிரதிவாதிகள் பணம் பெற்றதற்கோ அல்லது அதற்கான ஒப்புகை சீட்டோ எதுவும் இந்நீதமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளுக்கிடையே தகராறு உள்ளதாக என் பிராதில் குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை குறிப்பிட்டு பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் பிராதில் குறிப்பிட்டுள்ளது போல் பங்கு சான்றிதழை வங்கியிடம் அடமானம் வைத்து தான் பணம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடன் வாங்கியதாக

குறிப்பிட்டுள்ள நிலையில் எங்கு, எப்போது, எவ்வளவு கடன் பெற்றேன். வட்டி ஆகியவற்றை என் வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். கடன் தொகையை திருப்பி செலுத்தியதாக கூறும் பட்சத்தில் அதை யாருக்கு எப்போது செலுத்தினேன் என்று வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும் அவ்வாறு செலுத்தியதற்கான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு 2011 ல் தாக்கல் செய்யப்பட்டது.

4. இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரி திருத்தம் செய்த ஆண்டு 2018 இடைக்கால மனு எண் 264/2018 மூலம் திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2018 ல் விளம்புகை பரிகாரம் கோரியுள்ள காரணத்தினால் இந்த வழக்கு காலாவதி ஆகிவிட்டது என்றும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் பங்கின் மதிப்பு ரூ. 200000/- மேலாக இருந்தது அதனால் இந்த வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

5. 1ம் பிரதிவாதியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எங்கு உள்ளது என்றால் தூத்துக்குடியில். நான் கோரும் பங்கு சான்றிதழை என்னுடையது என்று விளம்புகை கோரி தான் 1ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன காரணத்தினால் இந்த வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க கூடாது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

6. 2ம் பிரதிவாதி பங்கு சான்றிதழ் காணாமல் போனதாக கூறியதாக என் பிராதில் குறிப்பிட்டுள்ள போது அவர்களிடம் இருந்து எழுத்து மூலமாக எந்த ஆவணமும் நான் வாங்கவில்லை என்றால் சரிதான்.

மேற்சொன்னவாறு நான் 2ம் பிரதிவாதியிடம் கேட்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் காணாமல் போன பிறகு மாற்று ( DUPLICATE ) பங்கு சான்றிதழ் நான் கோரவில்லை என்றால் சரிதான்.

7. 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு பங்கினை மாற்றம் செய்துவிட்டதாக பிராதில் குறிப்பிட்டு இருக்கும் பட்சத்தில் அதன் தேதியை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். Transfer form–ல் 1–ம் பிரதிவாதி என்னுடைய கையொப்பம் பொருந்தவில்லை என்று தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்ன விவரத்தை என் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்சொன்னவாறு கையெழுத்து பொருந்தவில்லை என்று எனக்கு தெரிந்த பிறகு நான் காவல்நிலையத்தில் மோசடி புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

8. என் கையெழுத்து மாறியுள்ள விவரத்தையும் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். Transfer form–ல் வேண்டுமென்றே என் கையெழுத்தை மாற்றி போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன காரணத்தினால் தான் நான் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் Transfer form–உடன் சேர்த்து பங்கு சான்றிதழை அடமானம் வைத்து அதன் தொகையை செலுத்தாத காரணத்தினால் தான் 1ம் பிரதிவாதி என் பங்கினை விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல, என்னுடைய கவனத்திற்கு கொண்டு வராமல் விற்பனை செய்துவிட்டார்கள்.

9. நான் கடன் கட்டாத காரணத்தினால் தான் நான் கடன் வாங்கிய விவரத்தையும் கூறவில்லை கடன் திருப்பி செலுத்திய விவரத்தையும் கூறவில்லை எனவே பொய்யான சங்கதிகளுடன் இந்த வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பல சங்கதிகளை மறைத்து உண்மைக்கு புறம்பான வகையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பங்கு மாற்றம் குறித்து எழும் பிரச்சனைகள் அனைத்தும் Company Law–வின் படி தான் பொருந்தும் என்றால் சரியல்ல. நான்காம் பிரதிவாதி சட்டப்படி தான் பங்கினை வாங்கியுள்ளார்கள், எந்த முகாந்திரமும் இல்லாமல் இந்த வழக்கு 4ம் பிரதிவாதியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. 4–ம் பிரதிவாதி தான் வழக்கில் குறிப்பிட்டுள்ள பங்கிற்கு உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. என் பெயரில் நான் கோரும் பங்கு ஒதுக்கப்பட்டதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத காணத்தினால் இந்த தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 04.03.p.m.**